**දෙවන වාර පරීක්ෂණය- 2017** | **06 ශ්‍රේණිය**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2017** | **தரம் 06**
**Second Term Test - 2017** | **Grade 06 A**

புவியியல் -I,II | இரண்டு மணித்தியாலம்
භූගෝල විද්‍යාව – I,II | පැය දෙකයි
Geography I,II | Two Hours

**பெயர்:-……………………………………………**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01-10 வரையான வினாக்களில் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01.கிழக்கு மற்றும் தெற்கு திசைக்கு இடையே உள்ள திசை எது?
01.தென் கிழக்குத் திசை
02.வடக்குத் திசை
03.கிழக்குத் திசை
04.ஈசான திசை

02.வெப்பத்தினை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணத்தின் பெயர்.
01.அனிமாமானி
02.திசைக்காட்டி
03.காற்று விசைமானி
04.வெப்பமானி

03.காற்றின் வேகத்தினை அளப்பதற்கு ……………………….. யை பயன்படுத்துகின்றனர்.
01.மணித்தியாலத்திற்குக் கிலோமீற்றர் 02.மணித்தியாலத்திற்குக் மீற்றர்
03.மணித்தியாலத்திற்கு மில்லி மீற்றர் 04.மணித்தியாலத்திற்கு சென்றிமீற்றர்

04.இயற்கையாக உருவான அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுவது.
01.பூங்காக்கள் 02.கட்டிடங்கள் 03.விளையாட்டு மைதானம் 04.மலைத்தொடர்கள்

05.கிறிஸ்தவ சமயத்துடன் தொடர்புடைய அடையாளமாகக் கருதப்படுவது.
01.சிலுவை 02.தர்மச்சக்கரம் 03.தேய்பிறை 04.சூளாயுதம்

06.ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் பயிரிடப்படும் பயிர்ச்செய்கையாக கருதப்படுவது.
01.தேயிலை 02.தென்னை 03.நெற்செய்கை 04.இறப்பர்

07.மனிதனுக்கு நோய்களை பரப்பும் ஓர் உயிரினம்
01.தேன் பூச்சு 02.எலி 03.வண்ணத்துப்பூச்சி 04.கிளி

08.மரத்தளபாடப் பொருட்களுக்கு பிரசித்திப்பெற்ற இடங்களில் ஒன்றாகக் கருதக்கூடியது.
01.மொரட்டுவை 02.பிலிமத்தலாவ
03.அம்பலாங்கொடை 04.ரதாவடுன்ன

09.அரசின் தலையீட்டுடன் இலவசமாக வழங்கப்படும் சேவையாகக் கருதப்படுவது.
01.மின்சாரம் 02.கல்வி 03.தபால் 04.தனியார் மருத்துவம்

10.வளிக்கோளத்தில் காணப்படுகின்ற வாயுக்களில் சுவாசத்திற்கு அவசியமான வாயு எது?
01.ஒட்சிசன் 02.காபனீரொட்சைட் 03.நைதரசன் 04.மேலுள்ள யாவும்

**11-15 வரையான வினாக்களில் சரியாயின் ( √ )எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் இடுக.**

11.காவியுடைக்கள்ளி, வெள்ளைப்புடவைக்கள்ளி, சிட்டுக்குருவி என்பன இடம்பெயர் பறவைகள் ஆகும். ( )

12.நீரானது ஆவியாகி மேலே சென்று குளிர்ச்சியடைந்து ஒடுங்கல் நிலையை அடைந்து முகில்கள் உருவாகுகின்றது. அச்செயன்முறையால் நாம் மழையினைப் பெறுகின்றோம். ( )

13.காற்றின் வேகத்தினை அளப்பதற்கு காற்றுத் திசைக்காட்டியை உபயோகிக்கின்றனர். ( )

14.நாகம் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கின்ற நச்சுத்தன்மையான ஊர்வன ஆகும். ( )

15.காலையில் சூரியன் உதிக்கும் திசையினை அடிப்படையாகக் கொண்டு எம்மால் திசையினை அறிந்துக்கொள்ள முடியும். ( )

**இலக்கம் 16-20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களினைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

16.நத்தார் பண்டிகை ……………………………. சமயத்தவரின் விழாக்களில் ஒன்றாகும்.

17.வளிமண்டலவியல் திணைக்களம் ………………………………………………… மாவத்தையில் அமைந்துள்ளது.

18.மழை வருவதற்கு முன்னர் வானில் ……………………………………. முகில்களைக் அவதானிக்க முடியும்.

19.விவசாய நிலப்பயன்பாட்டிற்கு ஏற்ப இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலும் பயிர்களை உற்பத்தி செய்தல்,
விலங்கு வளர்ப்பு மற்றும் ……………………………. கைத்தொழில் என்பன இடம்பெறுகின்றன.

20.பிலிமத்தலாவ …………………………….. உற்பத்திற்கு பிரசித்தமான இடமாகும்.

**(பித்தளை, மீன்பிடிக், இருள் சூழ்ந்த, கிறிஸ்தவ, கொழும்பு பௌத்தாலோக்க)**

**(20X02=40 புள்ளிகள்)**

## பகுதி-II

**முதலாம் வினா கட்டாயமானதாகும்.**
**முதலாம் வினா உட்பட 05 வினாக்களுக்கு விடை தருக.**

01.உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவருவப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

A.வடமாகாணத்திற்கு உரித்தாகும் மாவட்டத்தினைக் குறித்துக் காட்டும் எழுத்து எது.

B.இலங்கையின் பிரதான வர்த்தக நகரத்தினைக் குறித்துக்காட்டும் எழுத்து


C.முகமூடி கைத்தொழிலுக்கு பிரசித்தமான இடத்தினைக் குறிக்கும் எழுத்து எது?

D.உமது பாடசாலை உரித்தாகும் மாவட்டத்திற்கு பச்சை வர்ணத்தினைப் பயன்படுத்தி குறித்துக் காட்டுக.

E.உமது பாடசாலை உரித்தாகும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள மாவட்டங்கள் இரண்டினை வர்ணங்களைப்பயன்படுத்தி குறித்துக் காட்டுக.

F.பித்தளை உற்பத்திற்கு பிரசித்தமான இடமான பிலிமத்தலாவ நகரினை குறிக்கும் ஆங்கில எழுத்து எது?

G.இலங்கையின் மாகாண மற்றம் மாவட்டங்கள் தொடர்பாக 03 வசனங்கள் எழுதுக.



02.01.கீழே தரப்பட்ட சமயம் சம்பந்தமான சின்னங்கள் எச்சமயத்துடன் தொடர்புடையது எனக் குறிப்பிடுக.

A.சிலுவை :- ……………………………… B.தர்மச்சக்கரம்:- ……………………………

02.இலங்கையில் வாழும் மக்கள் பிரிவினர் 04 வரை எழுதுக.

03.அயலவர்களுடன் ஒத்துழைப்புடன் பங்குபற்றும் நடவடிக்கைகள் 03 இனைச் சுருக்கமாக விளக்குக.

03.**தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 01.வானிலைத்தகவல்களை எதிர்வுகூறல் | A.செண்பகம் |
| 02.சுற்றுலா பறவை ஆகும் | B.வெளவால் |
| 03.பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும் | C.தவளை |
| 04.மரங்களின் விதை பரவுவதற்கு உதவும் | D.மண்புழு |
| 05.மண்ணை செழிப்படையச் செய்வது | E.வெள்ளைப்புடவைக்கள்ளி |

04.01.பாடசாலை சூழலில் காணக்கூடிய பௌதீக அம்சமொன்றினையும் மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சமொன்றினையும் எழுதுக.

02.நிலத்தினை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 03இனை எழுதுக.

03.தாவரங்களினால் எமக்கு கிடைக்கின்ற பயன்கள் 05 இனை எழுதுக.

05.01.கால்நடை வளர்ப்பின் கீழ் வளர்க்கப்படும் விலங்குகள் 02 னை எழுதுக.

02.கால்நடை வளர்ப்பின் மூலம் மனிதனுக்கு கிடைக்கின்ற பயன்கள் 03 இனை எழுதுக.

03.கீழுள்ள பிரதேசங்கள் சிறப்பாக பயிரிடக்கூடிய பயிரினங்கள் 01 வீதம் எழுதுக.

A.வரண்ட வலயம்

B.கரையோரங்கள்

C.வடபகுதி

D.ஈர வலயம்

E.மலைப்பாங்கான பகுதி

06.01.கீழுள்ள பொருட்களினை தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களினை எழுதுக.

A.சட்டிப்பானை, ஓடு, செங்கற்கள்

B.மேசை,கதிரை

02.சூழலில் முக்கிய இடத்தினை வகிக்கின்ற நிலத்தினை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 03 இனை எழுதுக.

03.நிலத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் 03 ஐக் குறிப்பிட்டு விளக்குக.